## ஜனாஸா தொழுகை

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**مَنْ شَهِدَ الجَنَازَةَ حَتَّى يُصَلِّيَ، فَلَهُ قِيرَاطٌ، وَمَنْ شَهِدَ حَتَّى تُدْفَنَ كَانَ لَهُ قِيرَاطَانِ»، قِيلَ: وَمَا القِيرَاطَانِ؟ قَالَ: «مِثْلُ الجَبَلَيْنِ العَظِيمَيْنِ (أكثر المحدثين)**

பொருள்: எவர் ஒருவரும் ஜனாசா தொழுகையில் கலந்துகொள்வார்களோ அவர்களுக்கு ஒரு ஃகீராத் (மணிக்கல் எடை) அளவிற்கு நன்மை கிடைக் கின்றது, எவர் ஒருவர் அவர் நல்லடக்கம் செய்யப்படும் வரை உடனிருப் பாரோ அவருக்கு இரண்டு ஃகீராத் (மணிக்கல் எடை) அளவிற்கு நன்மை கிடைக்கின்றது, இறைத்தூதர் ﷺ அவர்களிடம் இரண்டு ஃகீராத் பற்றிக் கேட்கப்பட்டபோது அவர்கள் ﷺ கூறினார்கள்: இரண்டு மலைகளுக்குச் சம மானது (பெரும்பாலான ஹதிஸ் அறிவிப்பாளர்கள்). ஷஹீதானவர்களைத் தவிர மரணமடைந்தவர்கள் அனைவர் மீதும் ஜனாசா தொழுகை நடத்து வது ஃபர்ஜ்து கிஃபாயா ஆகும். அதாவது அதனைச் சிலர் நிறைவேற்றினா லும் அது அனைவராலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். அதனை எவருமே நிறைவேற்றாவிட்டால், அனைவருமே குற்றவாளிகளாக ஆகி விடுவார்கள். மய்யித் ஆணுடையதாக இருக்குமானால் இமாம் அதன் தலையின் புறமாக நின்று தொழ வேண்டும், பெண்ணுடைய ஜனாசாவாக இருந்தால் நடுப்பகுதியில் நின்று தொழ வேண்டும். இமாம் தக்பீர் கூறியபின் மெதுவாகவே சூரா ஃபாதிஹா ஓதுவார், பின்பு இரண்டாவது தக்பீர் கூறியபின் தரூத் இப்ராஹீம் (ஸலவாத்) ஓதுவார், அதற்கான சுன்னத்தான ஸலவாத் கீழ்வருமாறு:

**اللهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا صَلَّيْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ فِي الْعَالَمِينَ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ (مسلم، أحمد)**

அதன்பின் இமாம் மூன்றாவது தக்பீர் கூறி மய்யித்திற்காக துஆ செய்வார். இவ்விஷயத்தில் பல துஆக்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் மூலமாக அறி விக்கப்பட்டுள்ளன. உதாரணமாக:

**اللهُمَّ، اغْفِرْ لَهُ وَارْحَمْهُ وَعَافِهِ وَاعْفُ عَنْهُ، وَأَكْرِمْ نُزُلَهُ، وَوَسِّعْ مُدْخَلَهُ، وَاغْسِلْهُ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ، وَنَقِّهِ مِنَ الْخَطَايَا كَمَا نَقَّيْتَ الثَّوْبَ الْأَبْيَضَ مِنَ الدَّنَسِ، وَأَبْدِلْهُ دَارًا خَيْرًا مِنْ دَارِهِ، وَأَهْلًا خَيْرًا مِنْ أَهْلِهِ وَزَوْجًا خَيْرًا مِنْ زَوْجِهِ، وَأَدْخِلْهُ الْجَنَّةَ وَأَعِذْهُ مِنْ عَذَابِ الْقَبْرِ – أَوْ مِنْ عَذَابِ النَّارِ – (مسلم)**

www.uzairfalahi.com

*பொருள்:அல்லாஹ்வே, இவருடைய பாவங்களை மன்னித்தருள்வாயாக, இவர்மீது கருணை புரிவாயாக, இவருக்கு பாதுகாப்பு அளிப்பாயாக, மன்னிப்பு வழங்குவாயாக, இவரைக் கண்ணியப்படுத்துவாயாக, இவருடைய ஃகபரை விரிவானதாக ஆக்குவாயாக, இவரைத் தண்ணீர் மற்றும் பனியினால் கழுவி அவரைப் பாவங்களின் அழுக்கிலிருந்து துணிகளின் அழுக்கை அகற்றுவதற்கு கழுவுவதுபோன்று கழுவிவிடுவாயாக, இவருக்கு இங்குள்ள இல்லத்தைவிடவும் சிறந்த இல்லத்தைத் தந்தருள்வாயாக, இங்குள்ள உறவினர்களைவிட சிறந்த உறவினர்களைக்கொண்டும், இங்குள்ள வாழ்க்கைத் துணைகளைவிடச் சிறந்த வாழ்க்கைத்துணைகளைக் கொண்டும் மாற்றி வழங்குவாயாக, இவரை சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக மற்றும் நரகத்தின் வேதனையிலிருந்து காப்பாற்றுவாயாக (முஸ்லிம்).*
இறந்தவர் சிறுவர் அல்லது சிறுமியாக இருப்பின், இந்த வாசகத்தைக் கூடுதலாக துஆவில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

**اللَّهُمَّ اجْعَلْهُ فَرَطًا لِأَبَوَيْهِ وَسَلَفًا وَذُخْرًا وَعِظَةً وَاعْتِبَارًا وَشَفِيعًا**

அதன்பின் இமாம் நான்காவது தக்பீர் சொல்லி அனைத்து முஸ்லிம்களுக்காகவும் துஆ கேட்கவேண்டும்.

**اللَّهُمَّ رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الْآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ**

அதன்பின் இமாம் சலாம் கூறி தொழுகையை முடிக்கவேண்டும். ஜனாசா தொழுகையில் அதிகமானவர்கள் கூடும் வகையில் முயலவேண்டும் மற்றும் ஜனாசா தொழுகையை மக்களில் எல்லோரையும்விட மார்க்கப்பற்றுடைய, இறையச்சமுடைய ஒருவர் நடத்துவது சிறந்ததாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**مَا مِنْ مُسْلِمٍ يَمُوتُ فَيَقُومُ عَلَى جَنَازَتِهِ أَرْبَعُونَ رَجُلًا،لَا يُشْرِكُونَ بِاللَّهِ شَيْئًا،إِلَّا شُفِّعُوا فِيهِ(أبوداود، أحمد)**

*பொருள்: ஒரு முஸ்லிம் மரணித்துவிட்டால், அவருக்காக இணைவைப்பிலிருந்து அப்பாற்பட்ட நாற்பது பேர் ஜனாசா தொழுகையை நிறைவேற்றினார்களேயானால், அந்த மய்யித்திற்காக அவர்களுடைய துஆவும் பரிந்துரையும் ஏற்றுக்கொள்ளப்படும் (அபூ தாவூத்,அஹ்மத்).* ஜனாசா தொழுகையில் ஒருவர் தாமதமாக வந்து இணைந்தால், இமாமுடன் எவ்வளவு தொழுகை கிடைக்குமோ அதனைத் தொழுது, விடுபட்டதைப் பின்பு முடித்துக்கொள்ளவேண்டும். ஜனாசா தொழுகை சீரானதாக இருப்பதற்கு சாதாரண தொழுகைக்கான அதே விதிகள்தான் உள்ளன. ஜனாசா தொழுகை பள்ளிவாசலின் உட்புறத்திலும் வெளியிலும் நிறைவேற்றலாம். ஆண்களைப் போன்று பெண்களும் ஜனாசா தொழுகையில் கலந்துகொள்ளலாம். மார்க்

www.uzaifalahi.com

கச்சட்ட அறிஞர்களுடைய கருத்துவேறுபாடு, இத்தொழுகையை நடத்துவ தற்கு யார் அதிகம் தகுதியுள்ளவர்கள் என்ற விஷயத்தில்தான் உள்ளது. சிலர் கூறுகின்றனர், மரணித்தவர் குறிப்பிட்ட ஒருவரைத் தன்னுடைய ஜனாசா தொழுகை நடத்தவேண்டும் என்று கூறியிருந்தால், அவரே மிகவும் தகுதி யானவர், அடுத்ததாக அந்த நாட்டு ஆட்சியாளர், அமீருல் முஃமினீன், அடுத்து மரணித்தவரின் நெருங்கியவர்கள் அவர்களுடைய தகுதியின் தரவரி சைக்கேற்ப உகந்தவர்களாகக் கருதப்படுவர். ஜனாசா தொழுகை மரணித்த வர் வேறு ஊரிலுள்ளவராக இருந்தால் ஜனாசா இல்லாமலேயே தொழுகை நடத்துவதும் ஆகுமானதாகும். குறிப்பாக, எவருடைய மரணம் ஒரு அந்நிய நாட்டில் நிகழ்ந்து அவருக்காக ஜனாசா தொழுகை நிறைவேற்றப்பட வில்லையோ அவருக்காக நிறைவேற்றலாம்.

**மக்ரூஹான, (விரும்பத்தகாதவை) தவிர்க்கப்படவேண்டிய விஷயங்கள்**

1 **ஜனாசா தொழுகை மற்றும் நல்லடக்கம் செய்வதில் தேவையற்றத் தாமதம்**

2 **ஜனாசா வைக்கப்படுவதற்கு முன்பு அமர்ந்துவிடுதல்**

3 **ஜனாசாவுடன் அதே வாகனத்தில் செல்லுதல். அடக்கம் செய்ய வேண்டிய இடம் மிகத்தூரமாக இருந்தாலோ அல்லது எவரும் நடந்துசெல்ல இயலாதவராக இருந்தாலோ இவ்வாறு செய்யலாம்.**

4 **ஜனாசாவுடன் செல்லும்பொது உரத்தக் குரலில் திக்ரு செய்வது. திருக் ஃகுர்ஆன் ஓதுவது அல்லது கதறிக் கூக்குரலிடுவது ஆகியன.**

5 **ஜனாசாவுடன் தீப்பந்தங்கள் பற்றவைத்துக்கொண்டு செல்லுதல், தேவைப் படும் நிலையில், உதாரணமாக, இரவில் வெளிச்சத்திற்காக இவ்வாறு செய்ய லாம்.**

* * *

www.uzairfalahi.com